
# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

**௨௦௧௫ பெப்ரவரி வெளியீடு**



**பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே,
என்னை நோக்கிப்பாருங்கள்
அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்.**
ஏசாயா 45:22

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகளடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய **ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதுவுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் வெளியிடப்படும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கடைசி பக்கத்திலுள்ள கூப்பனை பூர்த்தி செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி,**
**வெள்ளவத்தை, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**

# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமை

இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்கு உள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்...
பிலிப்பியர் 3:10

பவுல் அப்போஸ்தலனுடைய மிகப்பெரிதான வாஞ்சை இயேசுவையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறியவேண்டும் என்பதே. அவனுடைய ஊழிய காலத்திலேயே அவன் ஏராளமான அற்புதங்களைக் கண்டிருந்தும், பலவிதமான பலத்த செயல்கள், மகத்துவங்களைக் கண்டிருந்தும் அவன் தன்னுடைய முதிர்வயதிலே, இயேசு கிறிஸ்துவையும், அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறிந்து கொள்வதற்காக மற்ற எல்லாவற்றையும் நஷ்டமும், குப்பையுமாக எண்ணினான்.

ஏனெனில், விசுவாசிக்குக்கிடைக்க கூடிய, மிக உயர்ந்த வல்லமை இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையே.

இதையறியாமல் அநேக விசுவாசிகள் பல்லாண்டு காலமாக பலவிதமாக திட்டமிட்டு, பல வழிகளைக்கையாண்டு, சொப்பனங்கள் தரிசனங்கள், அற்புதங்கள் அனுபவங்களை அடைந்து கொள்வதற்கும், அவை தான் வல்லமை நிறைந்த ஊழியம் என்றும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை தங்களுக்கு மிகவும் அருகிலிருப்பதை உணராமல் இருக்கின்றனர். நமது பாவங்களின் நிமித்தமாகவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய இடத்தை எடுத்து நமக்காக மரித்து, நம்மை நீதிமான்களாக்குவதற்காக உயிரோடெழுந்தார்.



அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார் (ரோமர் 4:25).

நாம் அனுதினமும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும், சோதனைக்கும், தேவைக்கும் ஏற்ற அதே உயிர்த்தெழுதலின் வல்லமையைப்பெற்றுக் கொள்ளலாமென விசுவாசிக்கிறோம். இவ்விசுவாசத்தை நாம் நிறைவாய் பெற்றுக் கொள்வதற்காக அவர் நம்மை பலவிதமான கஷ்டங்களின் நடுவே அழைத்துச் செல்கிறார்.

பொன்னைச் சுத்திகரிக்க அக்கினி தான் தேவை. சோப்பும் தண்ணீருமல்ல. களிம்பு நீங்கும் வரை பொன் அக்கினியிலே திரும்பத் திரும்ப புடமிடப்பட வேண்டியது போல நம்முடைய சந்தேகங்களும், அவிசுவாசங்களும் நீங்கும் வரை நமக்கும் பலவிதமான அக்கினிப் பரீட்சை தேவைப்படுகிறது. இவற்றை நாம் எப்படித் தாங்கிக் கொள்வது? கர்த்தரின் உயிர்த்தெழுதலின் வல்லமையைத் தினமும் நமக்கு சொந்தமாக்கிக்கொள்வதிலேயே தாங்கிக்கொள்கிற சக்தி எமக்குள் வருகிறது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையை நித்தமும் பெற வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயுமுள்ளது. "இனி வாழ்வது நானல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலாத்தியர் 2:20). என பவுல் சொல்வதின் கருத்து நமக்காக மரித்துயிர்த்து ஜீவிக்கிற கிறிஸ்துவின் பெலத்தை நாம் உள்வாங்கி வாழ்வதேயாகும். அந்த ஜீவனுள்ள கிறிஸ்துவே நம்முடைய வாழ்வின் எல்லாத் தேவைகளுக்கும், சோதனைகளுக்கும் போதுமானவர். விசுவாசத்தினாலே நாம் அந்த வல்லமையை அதிகமதிகமாகச்சொந்தமாக்கிக் கொள்வோமாக!

-- சகோதரன் பக்த் சிங் --

# தேவனுடைய மனுஷராகிய எழுவர்

**மோசே**
உபாகமம் 33: 1

**சாமுவேல்**
1 சாமுவேல் 9: 6

**தாவீது**
2 நாளாகமம் 8: 14

**எலியா**
1 இராஜா 17: 18, 24

**எலிசா**
2 இராஜா 5: 8

**செமாயா**
2 நாளாகமம் 11: 2

**ஆனான்**
எரேமியா 35: 4

# இரட்சிக்கப்படாத பேதுரு

யோவான்ஸ்நானகன் காவலில் வைக்கப்பட்ட பின்பே இயேசுகிறிஸ்து தமது பகிரங்க ஊழியத்தை ஆரம்பித்தார். அவ்வாறு ஆரம்பிக்கும் போது, தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்தை விட்டு கப்பர்நகூமிலே வந்து வாசம் பண்ணினாரென்று பார்க்கிறோம் (மத்தேயு 4: 12, 13). கப்பர்நகூமில் வசிக்க ஆரம்பித்தது முதல் இயேசு: "மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என பிரசங்கிக்கத் தொடங்கினார்.

இப்படியாக கப்பர்நகூமில் தமது பகிரங்க ஊழியத்தை ஆரம்பித்த இயேசு ஓர் நாள் கலிலேயாக்கடலோரமாய் நடந்து போகையில் மீன் பிடிக்கிறவர்களாயிருந்த இரு சகோதரராகிய பேதுருவும், அவன் சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலை போட்டுக் கொண்டிருக்கிற போது, அவர்களைக் கண்டு "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள். மத்தேயு 4: 12 - 20.

இயேசு தமது ஊழியத்தைக் கப்பர்நகூமிலே ஆரம்பித்ததின் காரணம் என்ன? முன்பின் அறியாத ஒருவர் அழைத்த உடனேயே பேதுருவும், அந்திரேயாவும் பின் சென்றது ஏன்?

உண்மையில் இதுவல்ல பேதுரு நம் ஆண்டவர் இயேசுவைக்கண்ட முதல் தருணம். யோவான்ஸ்நானகன் காவலில் வைக்கப்பட முன்பே அந்திரேயா இயேசுவை பேதுருவுக்கு அறிமுகப்படுத்தியிருந்தான். சீமோன் என்ற அவனது இயற்பெயரை பேதுரு என மாற்றியவரே இயேசு கிறிஸ்து தான் (யோவான் 1: 35 - 42).

யோவான் காவலில் வைக்கப்பட்ட பின் இயேசு கப்பர்நகூமுக்கு வந்த காரணங்களில் ஒன்று என்னவெனில், கப்பர்நகூமிலே தான் பேதுருவின் வீடு இருந்தது. அங்கே இயேசுவின் பிரசங்கத்தையும், அவரது நடத்தையையும் பேதுரு அவதானித்து வந்திருப்பான். இது பேதுருவின், இயேசுவுடனான இரண்டாம் சந்திப்பு.

தன் முதல் சந்திப்பிலேயே தனது பெயரை மாற்றியவர், அதுமட்டுமன்றி, தன் ஊரிலேயே பல நாள் வசித்து, பிரசங்கித்து வந்த வித்தியாசமான ஒருவர் தன் பின்னே வா என்று சொன்னதினாலேயே பேதுரு அவர் பின் சென்றான். ஒரு வேளை மனுஷரைப்பிடிக்கிறவர்களாக்குவேன் என அவர் சொன்னதினால் தனக்கு வேறொரு தொழில் கிடைக்கப்-

போகிறது என்ற எண்ணத்தில் அவர் பின் சென்றிருக்கலாம்.

இப்பொழுது பேதுரு இயேசுவுக்கு பின் செல்லும் ஒருவன். அவரது பிரசங்கங்கள், அவர் செய்த அற்புதங்கள் அவரது குணாதிசயங்கள் அனைத்தையும் அவர் அருகிலேயே இருந்து கண்டு, கேட்டு அனுபவித்து வந்தான். இயேசு தன் வீட்டிற்கே வந்து தனது மாமியைக்குணமாக்குவதையும் கூடவே இருந்து கண்டான். அதே நாளிலே பிசாசு பிடித்திருந்த அநேகரையும் பிணியாளிகளையும் சொஸ்தமாக்கியதையும் கண்டான். (மத்தேயு 8: 14 - 16, லூக்கா 4: 38 - 41)

இச்சம்பவங்கள் இப்படியிருக்க, நம்மை வியக்க வைக்கும் விடயம் என்னவெனில், இயேசுவுக்கு இவ்வளவு அருகில் பேதுரு இருந்தும் கூட இன்னும் அவன் இரட்சிக்கப்படவில்லை.

நம்மிலும் அநேகர் இப்படித்தான், சிறு வயதிலிருந்தே ஆலயம் செல்வதுண்டு. அங்கே சொல்லப்படும் பிரசங்கங்களைக் கேட்பதுண்டு. வேதம் வாசிப்பதுண்டு. ஜெபமும் செய்வதுண்டு. கிறிஸ்தவ குடும்பத்திலே பிறந்தவராயுமிருக்கலாம். எனினும், இயேசுவை நாம் தனிப்பட்ட முறையில் அறிவோமா? நம் வாழ்வை ஆள்பவர், நமது வாழ்வு தொடர்பான தீர்மானங்களை எடுப்பவர் அவரா? அவர் மூலமாய் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா? அல்லவென்றால், நான் வெறும் கிறிஸ்தவனா?

பேதுரு எப்படி இரட்சிக்கப்பட்டான்? அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

-S. வரபிசாத்-

**பரலோகராஜ்யத்தின் இரகசியங்களை வெளிப்படுத்திய உவமைகள்**
*மத்தேயு 13*

விதைப்பவன் உவமை
3 - 9

கோதுமை, களை உவமை
24 - 30

கடுகு விதையின் உவமை
31 - 32

புளித்தமா உவமை
33

நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷ உவமை
44

முத்து வியாபாரியின் உவமை
45 - 46

கடலிலே போடப்பட்ட வலை உவமை
47 - 50

# லோதேபார் (வெறிச்சோடின இடத்திலிருந்து) ஜெருசலேமுக்கு (சமாதானத்தின் நகரத்திற்கு)

தியானிக்க வேண்டிய பகுதி : 2 சாமுவேல் 9 ஆம் அதிகாரம்

இந்த வேத பகுதியிலே தாவீதின் சிறந்த குணத்தையும், தகுதியற்ற ஒருவன் எவ்வாறு தகுதி பெற்றான் என்பதையும் பார்க்கக் கூடியதாய் இருக்கிறது.

நான்காம் வசனத்தின்படி, அவன் எங்கேயென்று ராஜா கேட்டபொழுது. இதோ அவன் லோதேபாரிலிருக்கிற மாகீரின் வீட்டில் இருக்கிறான் என பதில் கூறப்படுகிறது. லோதேபார் எனும் எபிரெய சொல்லின் பொருள் “வெறுமையான இடம்” என்பதாகும்.

எங்களுடைய பழைய வாழ்வை சற்று சிந்திப்போமேயானால் நாமும் இப்படியான ஒரு வாழ்க்கையையே வாழ்ந்தோம். ஆனாலும், தேவன் தமது மிகுந்த கிருபையினாலே எம்மை அழைத்து சமாதானத்தின் வழியிலே நடத்துகிறார்.

மேவிபோசேத்தின் வாழ்க்கையில் தாவீது ஏற்படுத்தின மாற்றங்களை ஏழாம் வசனம் இப்படியாக தெளிவு படுத்துகிறது:

1. தாவீது மேவிபோசேத்துக்கு தயவு பாராட்டினான். ஆங்கில வேதத்தில் Loving kindness எனப்படுகிறது. அதாவது அன்புடனான தயவு வழங்குதலாகும்.

நாமும் எந்த விதத்திலும் அவரது இராஜ்யத்திற்கு தகுதியற்றவர்கள். எனினும் தேவன், எம் வெறுமையான வாழ்வை அவரது மகா கிருபையி-னாலும், இரக்கத்தினாலும் மனம் மகிழ்கிற வாழ்வாக மாற்றினார். தேவனுடைய விலையேறப்பெற்ற அன்பின் மகத்துவங்களை எடுத்துக்-காட்டும் வேத சான்றுகள் அநேகம் இருப்பினும் எபேசியர் 2: 4, 7 எமக்கு வலியுறுத்துவது என்னவென்றால், தேவனோ இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே... கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி உன்னதங்-களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்.

2. இழந்த எல்லா நன்மைகளையும் திரும்ப பெற்றுக்கொள்ளல்.

யோனத்தானின் குமாரனாகிய மேவிபோசேத் தான் இழந்துபோன செல்வங்களை திரும்பப்பெறுகிறான். இதற்கு பொருத்தமாக தேவன் கூறும் வார்த்தை யோவேல் 2: 25ல், நான் உங்களிடத்தில் அனுப்பின... பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன் என்கிறது.

3. இராஜாவோடு நித்தமும் போஜன பந்தியில் பங்குபெற்றல். வசனம் 10,11,13

ஒரு பந்தியில் நாம் அமர்ந்து உணவருந்தும்போது ஐக்கியம் உருவாகுகிறது. நமது அன்றாட கிறிஸ்தவ வாழ்வில் இது இன்றி-யமையாததாய்க் காணப்படுகிறது. 1 யோவான் 1: 7 அவர் ஒளியில் இருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்.

ஒரு இராஜாவுடைய போஜனபந்தி சாதாரணமாயிராது. அதை விட எமது ராஜாதி ராஜாவாகிய இயேசு கிறிஸ்துவின் போஜனபந்தி எவ்வளவு மேன்மையாய்க் காணப்படும்!

4. மேவிபோசேத் எருசலேமுக்கு அழைக்கப்படுகிறான்.

பாழான இடத்தில் வாழ்ந்த ஒரு ஏழையான இளவரசன் அரசமாளிகைக்கு அழைக்கப்படுகிறான். இளைப்பாறுதலான இடம். ஆம், நாம் ஆவிக்குரிய இளைப்பாறுதலுக்காக அவர் பாதம் வந்து விட்டோம். எபி 4: 1, 16. நித்தியத்துக்குள்ளும் எம் சமாதான வாழ்க்கை தொடரும்.

5. குறை மறைக்கப்பட்டது.

மேவிபோசேத் இரண்டு கால்களும் முடமானவன். அதன் காரணத்தை 2 சாமுவேல் 4: 4 ல் பார்க்கிறோம். ஆனாலும் அவன் தாவீதோடே சாப்பிட மேசையில் அமரும் போது அந்தக்குறைவு மறைகிறது. அதே வண்ணமாக நாம் அநீதியானவர்கள் என்றாலும் ஆண்டவர் எமக்காக மரித்தார், திரு இரத்தம் சிந்தினார், உயிர்த்தெழுந்தார், இன்றும் வாழ்கிறார், நாம் அவரை மட்டுமே விசுவாசித்து எம் சொந்த தெய்வமாக ஏற்றுக்கொள்ளும் போது, இந்த ஒரேயொரு அடிப்படையில், நாம் ஒரு பாவமும் செய்யாத, நீதிமான்களாக தேவன் எம்மைக்கருதுகிறார் ரோமர் 3: 24, 5: 1:5

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தின் காலை நேர தியானத்திலிருந்து. 17-01-2014

## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

**ஞாயிற்றுக்கிழமை**

| | | |
|---|---|---|
| மு.ப. | 8.15 - | ஞாயிறு பாடசாலை |
| மு.ப. | 9.30 - | ஆராதனை வேளை |
| பி.ப | 1.30 - | வாலிபர் கூட்டம் |
| பி.ப. | 4.00 - | சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி) |
| பி.ப. | 6.00 - | சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி) |

**செவ்வாய்க்கிழமை**

| | | |
|---|---|---|
| பி.ப | 6.30 - | சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி) |

**புதன் கிழமை**

| | | |
|---|---|---|
| பி.ப | 6.00 - | ஜெபக்கூட்டம் |

**வெள்ளிக்கிழமை**

| | | |
|---|---|---|
| பி.ப | 6.00 - | வேத ஆராய்ச்சி |

இக்கூட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்!



# பார்

எண் 21:4-9 | ஏசா 45:22

மேலுள்ள வேதப்பகுதியின் அடிப்படையில் 4 வகையான பார்வைகளைக் கருதப் போகிறோம்.

**1. உனக்குள் பார்**

மீள்சீர் பெறுவதற்கு எடுக்கப்பட வேண்டிய முதல் அடி இதுவே. சர்ப்பத்தால் கடிபட்டவன் தன் சுய நிலைமையைப்பார்த்து, தான் சர்ப்பத்தால் கடிபட்டிருப்பதை உணர வேண்டியதாயிருந்தது.

இன்று, தங்களைத்தாங்களே பார்த்து தங்கள் சுய நிலைமையை உணர்ந்து கொள்ள ஒருவரும் விரும்புவதில்லை. அநேகர் செய்வதெல்லாம், தங்களுடைய நிலையைப்பற்றி சற்றும் சிந்தியாமல், மற்றவர்களைப் பார்த்து மற்றவர்க்கு அவர்களது நிலையை காண்பிப்பதுவே.

நாம் நம்மையே பார்த்து நாம் பாவம் நிறைந்தோர் என உணர வேண்டும். அப்பொழுது மட்டுமே நாம் காப்பாற்றப்படும் நமபிக்கையுள்ளது. நமது பாவ நிலையை நாம் மறைத்தால் நமக்கு எவ்வித நம்பிக்கையுமில்லை. இது தொடர்பாக பின்வரும் வசனங்களைக் கருத்தில் கொள்ளுங்கள்:
சங் 32:5/ நீதி 28:13/ 1 தீமோ 1:15

தேவனுக்கு முன்பாக நீங்கள் பாவி எனவும் உங்களுக்கு இரட்சிப்பு தேவையென்றும் ஏற்றுக்கொள்ள நீங்கள் விருப்பமா?

**2. எளிமையான விசுவாசத்துடன் பார்**

இவ்வேத பகுதிக்கமைய, கடிபட்டவன் தான் இருந்த இடத்திலிருந்தே பார்க்க வேண்டியதாயிருந்தது. அவனால் செய்ய முடிந்ததும் செய்வான் என எதிர்பார்க்கப்பட்டும் வேறொன்றுமல்ல. கடிபட்டவன், எளிமையான விசுவாசத்துடன் அவ்வெண்கல சர்ப்பத்தைப் பார்த்து அப்பார்வை தனக்கு வாழ்வு தரும் என நம்ப வேண்டியிருந்தது.

இந்த நிலையின் பரிகாரத்துக்கு தேவையான யாவற்றையும் தேவன் செய்துவிட்டார். இது, எபேசியர் 2:8 குறிக்கும் எம் இரட்சிப்புக்கேற்ற இருவித கொள்கைகள் நினைப்பூட்டுகிறது:

• கிருபை
தம் ஒரேபேறான குமாரனைக்கொடுத்து நம் பாவத்துக்கான தண்டனையை தேவன் செலுத்திவிட்டார்.

• விசுவாசம்
எளிமையாய் விசுவாசித்து, நாம் இரட்சிக்கப்படுவதற்காக தேவன் நிறைவேற்றியுள்ளதை ஏற்றுக்கொள்வது மனிதனின் பொறுப்பாகும்.

எளிமையான விசுவாசத்துடனே பார்த்து தேவன் அருளும் இலவச ஈவைப் பெற்றுக்கொள்ள நீங்கள் விருப்பமா?

*தொடர்ச்சி அடுத்த இதழில்*
~ சகோ. தினேஷ் ~



**என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்**
***ஏசாயா 45:22***

# மார்த்தாளே நீ மாறவேண்டும்!

லூக்காவின் சுவிசேஷம் *10: 38–42*

இங்கே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மார்த்தாளின் வீட்டிற்கு உணவருந்த செல்கிறார். 38ம் வசனத்தில் அவர்கள் என்று சொல்லப்பட்டதிலிருந்து, ஆண்டவரோடு சீஷர்களும் இருந்தார்களென அறிகிறோம். அநேகமாக ஆண்டவர் சென்றவிடமெல்லாம் சீஷர்களும் அவரோடு சென்றதையே பார்க்கக்கூடியதாயுள்ளது. மார்த்தாளும், அவளுடைய சகோதரி மரியாளும் சகோதரன் லாசருவும் ஆண்டவர் பேரில் அன்புள்ளவர்களாயிருந்த படியால் அவர் அவ்வழியினூடாக செல்லும் போதெல்லாம் அவர்களைச்சந்திக்க வருவார்.

மார்த்தாள் ஓடியாடி வேலை செய்யும் வேளையில் தன் சகோதரி தனக்கு உதவவில்லை என ஆண்டவரிடம் வந்து குறை சொல்லுகிறாள். ஆமாம், ஆமாம் உண்மை தான் என்று ஆண்டவர் பதில் கூறாமல், மார்த்தாளுக்கு வேறு விதமான பதிலை கொடுக்கிறார். நீ அநேகக் காரியங்களைக்குறித்து கவலைப்படுகிறாயே? என்று கூறினார்.

ஆண்டவரும் அவரின் சீஷரும் திரும்பவும் அங்கு சென்ற அடுத்த சந்தர்பப்பத்தை நாம் பார்ப்போம். யோவான் 12: 1 - 3:

பஸ்கா பண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார்.

அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள் மார்த்தாள் பணிவிடை செய்தாள் லாசருவும் அவருடனே கூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான். அப்போது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள். அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது.

லூக்கா 10: 40ல் பற்பல வேலைகளில் கஷ்டப்பட்ட அதே மார்த்தாள் தான் இப்போது பணிவிடை செய்து கொண்டிருந்தாள். லூக்கா 10: 42ல் மரியாள் அவர் பாதத்தில் அமர்ந்திருந்தாள், ஆனால் இந்த முறை



ஆண்டவர் பாதத்தண்டையில் அமர்ந்தது மட்டுமல்லாமல், நறுமண தைலத்தை அவருடைய பாதங்களில் பூசி அவருடைய பாதங்களை

அவளுடைய கூந்தலினால் துடைக்கிறாள். இப்போது மார்த்தாளிடத்தில் மாற்றம் காணப்பட்டது. அவள் தன் சகோதரியைக் குறித்து எவ்வித குறையையும் சொல்லவுமில்லை, அதைக்குறித்து சிந்திக்கவுமில்லை. இம்முறை அவள் முறுமுறுக்காமல் இவ்வேலைகள் எனக்கு எவ்வளவு கஷ்டமாயிருந்தாலும் ஆண்டவருக்காக இப்பணியை செயலாற்ற நான் கடமைபட்டுள்ளேன் என எண்ணி அவளுக்குக் கிடைத்த அப்பணியை அவள் நேர்த்தியாக முடித்தாள். ஆண்டவரும் அவளுடைய மனப்பாங்கு சரியானபடியால், மார்த்தாளின் பணிவிடையை அவர் மதித்திருக்க வேண்டும்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற பழமொழி ஒன்று உண்டு. நாம் வாழ்கின்ற சூழ்நிலைகள், தொழில் புரிகின்ற இடங்கள், சபையாகக் கூட இருக்கலாம். தேவனை அறியாதோர் மத்தியில் நாம் தங்கியிருக்கும் போதும், தொழில் செய்யும் போதும் பலதரப்பட்ட குறைபாடுகள், அநியாயங்களைக் காண்கிறோம். நாம் அப்படிப்பட்ட அநியாயமான நேர்மையற்ற விடயங்களுக்கு உடன்படாமல் நாமே நேர்மையாய் சரியாய் நடக்க கற்றுக்கொள்ள வேண்டும். திருந்தாதவர்களை நாம் திருத்துவதை விட்டுவிட்டு, அவர்கள் முன் எமது கடமைமையை தேவன் பார்வையில் நேர்மையாய் செய்ய வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்களோடு நடப்பது மிக, மிக சிரமமாக இருந்தாலும், அது தேவனுக்கே மகிமையை கொண்டு வரும். ஏனென்றால், அதிகமாக ஆண்டவரை அறியாதவர்கள் எமது தொழில் நேர்மையைக்காண்பார்கள்.

மற்றவர்கள் மாறவேண்டுமென நாம் எதிர்ப்பார்க்காமல், முதலாவது நான் சரியான நிலைக்கு மாறவேண்டும். இவ்வாறு நானே என்னைப் பற்றின சரியான மதிப்பீட்டை அவதானித்து, தேவனிடத்தில் ஜெபித்து எம்மை அவர் மாற்றுவதற்கு இடமளித்தால், அவருக்கேற்ற பிரகாரம் அவர் எம்மை மாற்றுவார்.

ஒரே பக்கத்திற்கு சார்ந்து வாழாமல் ஒரு சமனான (Balanced) வாழ்வை ஆண்டவருக்குள் நாம் வாழுவோம்!

ஆதலால், எம்மை முதலாவதாக ஆண்டவரிடத்தில் ஒப்புக்கொடுப்போம், மேற்கொண்டு கடைமைகளை செய்ய தேவன் எமக்கு வழிநடத்துதலை தருவாராக!

*திருமதி யாழினி ஆனந்தகுமார்*

**என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு! என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்.**

***சங்கீதம் 42:11***

# எனது வாழ்வில் தொடர்ந்த அற்புதம்

ஒருநாள் நானும் எனது உறவின சகோதரி ஒருவரும் வெள்ளவத்தை, விவேகானந்த வீதியினூடாக சென்று கொண்டிருந்த ஒரு மாலை வேளையிலே, அந்த ஆலயத்தில் அழகான பாடல்களின் சத்தம் என் செவிக்கு எட்டின படியால், என் மனதுக்கு மகிழ்ச்சியும், அந்த ஆலயத்துக்குள் செல்லவேண்டும் என்ற ஆவலும் எனக்குள்ளே தோன்றினது. நான் மறுதினமே அங்கு சென்று அங்கிருந்த எஒரு சகோதரனிடம் அந்த ஆலயத்தைக் குறித்த விபரங்களை அறிந்துக்கொண்டேன். அவர் எனக்கு "செவ்வையான பாதை" என்ற ஒரு சிறிய புத்தகத்தைக் கொடுத்தார். அப்புத்தகத்தை நான் வீட்டுக்கு எடுத்துச்சென்று ஆவலோடு வாசித்து, அதில் காணப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொண்டு, மேலும் இரண்டு சகோதரிகளோடு பேசி மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொண்டேன்.

நான் செவ்வாய் கிழமைதோறும் அங்கு இடம்பெறும் சுவிசேஷக் கூட்டத்தில் கலந்து கொள்ள தொடங்கினேன். ஒரு நாள், சபையை சார்ந்த அவ்விரு சகோதரிகளும் எங்களின் வீட்டுக்கு வந்து பாவியின் ஜெபத்தை திட்டவட்டமாக கற்றுக்கொடுத்த வேளையிலே அந்நாளில் தானே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை என் சொந்த தெய்வமாக ஏற்றுக்கொண்டேன். நான் வேதத்தை வாசிக்கத் தொடங்கினேன்.

ஆரம்ப நாட்களில் நானும் எனது மகன் பிரதீவும் மட்டுமே ஆலயத்திற்கு செல்வோம். இக்கால கட்டத்தில் எனது கணவரும் தேவன் யாரென அறிய ஆவலாய் இருந்தபடியால், கர்த்தருடைய காரியங்களில் எவ்வித தடைகளும் ஏற்படவில்லை. ஒரு குறுகிய கால இடைவெளியிலேயே, நாங்கள் குடும்பத்தோடு சேர்ந்து ஆலயத்திற்கு செல்ல கர்த்தர் எங்களுக்கு சகல வழிகளிலும் உதவி செய்தார். நாளடைவில் எனது கணவரும் சபை ஐக்கியங்களிலே ஈடுபாடு உடையவரானார், நாங்கள் விருப்பபட்ட பிரகாரமாகவே, இருவரும் ஒரேநாளில் ஞானஸ்நானம் எடுத்தோம்.

இயேசுவை மட்டுமே தெய்வமாக ஏற்றுக்கொள்வதற்கு முன்பதாக என்னுடைய பின்னனி ரோமன் கத்தோலிக்கமாகும். எனது கணவர் இந்து சமயத்தைச் சேர்ந்தவர். எங்களுக்கு இரு ஆண்பிள்ளைகள் இருக்கிறார்கள்.

முதலாவது நாங்கள் தேவனுக்காக எடுத்த உறுதிப்பாட்டின்படி, முன்பு வணங்கின விக்கிரங்களை முற்றாக நீக்கிவிட்டோம். 1 தெசலோ 1: 5, 9 வசனத்திற்கமைய விசுவாசத்தின் கிரியையானது ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, விக்கிரகங்களைவிட்டுத் தேவன் இடத்திற்கு மனந்திரும்புவதாகும் என்று அறிந்துகொண்டேன்.

நான் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட பின் குடும்பத்தில் சமாதானம் உருவானது. ஒரு துன்பத்தில், பிரச்சினையில் நான் ஆண்டவரோடு போராடி ஜெபித்த வேளையில் தேவன் என்னைப்பெலப்படுத்தின வாக்குத்தத்தமானது ஏசாயா 41:10 "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்."

நானும் எனது கணவரும், எமது திருமண ஆண்டு நிறைவு நாளன்று ஜெபித்து, அன்று தேவன் தந்த வார்த்தையாகிய "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ, கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" என எபேசியர் 5: 8ல் எழுதப்பட்டுள்ள இவ்வார்த்தையின் படி நடக்க எங்களுக்கு தேவன் உதவி செய்ய வேண்டும் என்றே ஜெபித்தோம்.

இன்றும் இரட்சிக்கப்படாத எமது நெருங்கின உறவுகள் எங்களோடு தான் வாழ்கிறார்கள். எனினும் அவர்கள் எங்களுடைய தலைமைத்துவத்தில் இருப்பதால் எந்தவொரு இடறலும் இல்லை. அவர்களுடைய இரட்சிப்புக்காக பிரயாசப்படுகிறேன்.

சபை ஐக்கியங்களில் நான் சென்று அங்கு இடம்பெறும் காரியங்களை கவனமாக பார்த்தறிந்தேன். அங்கு ஆவிக்குரிய சகோதர சகோதரிகளோடு நல்லதொரு தொடர்பும், அவர்களின் அன்பும் உருவானது. இன்றுவரை அது எனக்கு கர்த்தரோடு வாழ பெரிய பெலனாகவும், நானும் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைய உதவியாகவும் இருக்கின்றது. கர்த்தர் உங்கள் வாழ்விலும் வல்லமையாக அருள் புரிவாராக!

ஆதலால்,
விசுவாசம் கேள்வியினாலே வரும்,
கேள்வி தேவனுடைய
வசனத்தினாலே வரும்.
ரோமர் 10:17

*- திருமதி சகாயமேரி அஜீத்குமார் -*

## வெற்றி தந்த சிற்றாயுதங்கள்

*நியாயாதிபதிகளின் புத்தகம்*

**தாற்றுக்கோல்**
*3 : 21*

**கூடார ஆணி**
*4 : 21*

**பானை**
7 : 20 –25

**எக்காளம்**
7 : 20 –25

**தீப்பந்தம்**
7 : 20 –25

**திரிகைக்கல்லின் மேற்பகுதி**
*9 : 53*

**தாடையெலும்பு**
*15 : 15*



# அடைக்கல பட்டிணங்கள்

## புகலிடம்

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு கானானுக்குள் (வாக்குதத்த தேசம்) வந்த பிற்பாடு ஜனங்களை குடியமர்த்த தேவன் யோசுவாவை தலைவனாக்கினார். அவன் பன்னிரண்டு கோத்திரங்களையும் மாகாண ரீதியில் பிரித்து குடியமர்த்தினான். பல்வேறு திட்டங்களின் கீழ் குடியமர்வு நடைமுறைப்படுத்தலில், ஒரு சிறப்பான திட்டமொன்றை நாம் கவனித்தாக வேண்டும். இதை நாம் திட்டவட்டமாக கற்றுக்கொள்வது கட்டாயமாகும்.

எண்ணாகமம் 35, யோசுவா 20 மற்றும் உபாகமம் 19ம் அதிகாரங்களை வாசிக்கவே வேண்டும். ஜனங்கள் கைப்பிசகாக செய்யும் (தற்செயலான) தவறுகள், குற்றங்களுக்கு தப்பி சரணடைந்து வாழ 6 புகலிடங்களை உருவாக்க வேண்டுமென்று தேவன் யோசுவாவுக்கு கட்டளையிட்டிருந்தார். ஒவ்வொரு பட்டணத்துக்குள்ளும் ஆசாரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஓடிவந்தவர்களின் பாவ நிவிர்த்திக்காகவும் பாதுகாப்புக்காகவும் இருந்தார்கள். அதன் ஒவ்வொரு பட்டணங்களுக்கும் அர்த்தங்கள் இருக்கின்றன.

### கேதேஷ் (Kedesh)

பரிசுத்த ஸ்தலம் - எபிரெயர் 10:20, சங்கீதம் 93:5

### சீகேம் (Shechem)

பலமான தோற்பட்டை. இந்த அர்த்தமானது ஒரு விசுவாசிக்கு எவ்விதம் பொருந்தும் என பார்த்தால், எமக்கு சுமக்க வேண்டிய 3 சுமைகள் இருக்கின்றன.

**1. அன்பு - கலாத்தியர் 6:2**
**ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.**

**2. தைரியம் - கலாத்தியர் 6:5**
**அவனவன் தன்தன் பாரத்தைச் சுமப்பானே!**

**3. விசுவாசம் - சங்கீதம் 55:22**
**கர்த்தர்மேல் உன் பாரத்**தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்.

### எபிரோன் (Hebron)

கீரியாத் அர்பா எனும் மறுபெயரையும் ஐக்கியம் எனும் அர்த்தத்தையும் கொண்டது. ஐக்கியத்தில் உருவாகும் நான்கு ஆசீர்வாதங்கள் பெலம், மகிழ்ச்சி, வெற்றி, விசுவாசம்.

1 யோவான் 1: 3, 7 - நீங்கள் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாம் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம். எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது.

அப்போஸ் 16: 34 - பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய், அவர்களுக்குப்போஜனங்கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங்கூடத் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சி யாயிருந்தான்.

1 கொரிந்தியர் 1: 9 - தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயி-

ருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.

எபிரோனின் ஆரம்பம்: ஆதி 13: 18ல் ஆபிரகாம் மிகுந்த வாஞ்சையுடனும் நோக்கத்துடனும் அவ்விடத்தை விலை செலுத்தி பெற்றுக்கொண்டான். ஆதி 14:13ன் படி ஆபிரகாம் சிறந்த நண்பர்களை தெரிந்துகொண்டான்.

- மம்ரே - போஷாக்கு, சரீரசக்தி
- எஸ்கோல் - மகிழ்ச்சி
- ஆநேர் - வாழ்க்கை

2 சாமுவேல் 3: 32 - 34ல் அப்னேர் என்ற மாவீரன் எபிரோனை விட்டு சற்று விலகினதால், அவனுடைய எதிரியினால் அவன் கொல்லப்பட்டான்.

### பேஸேர் (Bezer)

விலைமதிப்புள்ள உலோகம், திரவியம், பலமுள்ள கோட்டை. சங்கீதம் 18:1,2, சங்கீதம் 46:1, 91:2, 2 கொரிந்தியர் 12:10

### ராமோத் (Ramoth)

உயர்ந்த ஸ்தலம் - ஏசாயா 26:4 எபேசியர் 2:7 உபாகமம் 32:13 ஏசாயா 33:16, 40:31

### கோலோன் (Golan)

வட்டம், சிறையாக்கப்பட்ட கைதி, சதாகால அடைக்கலம், பரிபூரணம் என்பதைக் குறிக்கிறது. கொலோ 2:10

புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு தேவன் எவ்விதமான அடைக்கலப்பட்டிணத்தை (புகலிடம்) தந்தாரென பார்ப்போமேயானால், எமக்குள்ள புகலிடம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே.

சத்துருவான பிசாசும், அவனுடைய சேனைகளும் எம்மை தப்பவிடாமல் பாவவழியிலே, எம்மை நரகத்திற்கு நேராக துரத்திக்கொண்டே வந்தன. ஒரு கட்டத்தில் நாம் ஆண்டவரிடம் வந்த வேளையில் எமது விரோதிகளிடமிருந்து எம்மை அவர் பாதுகாத்துக்கொண்டார்.

**நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்.**
எபிரெயர் 6:18

தேவனுடைய வாக்குத்தத்தம் மற்றும் தேவனுடைய பிரசன்னம் ஆகிய இரண்டுமே மாறாத விசேஷங்களாகும்.

சதாகாலமும் எமது புகலிடமான ஆண்டவரோடு வாழ்வோமாக!

## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**

**பெயர்:** ..............................................................................

**முகவரி:** ..............................................................................

..............................................................................

..............................................................................

**ஒப்பம்:** ..............................................................................




கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும்
ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால்
உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி
அனுப்பிவையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:

Jeeva Oli
Christian Fellowship Centre
7, Vivekananda Road, Wellawatte,
Colombo 6.
Tel: 2581901